**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி 2021**

**D031 இலக்கணம் – 4 (யாப்பு, அணி)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. ஐந்திலக்கணமும் அடங்க நூல் செய்தோர் இருவர் பெயரைச் சுட்டுக.
2. செய்யுளின் சந்தத்தை உண்டாக்கும் அடிப்படைச் செய்யுளுறுப்பு எது?
3. தளையின் பெரும் பிரிவுகள் எவை?
4. கீழ்க்கதுவாய் எனும் அமைப்புக்கு எந்தச் செடியை உதாரணமாக்கலாம்?
5. வாயுறை என்பதன் பொருள் என்ன?
6. ஆசிரியத் தாழிசையின் அடி எண்ணிக்கை யாது?
7. பட்டினப்பாலை எவ்வகைப் பா?
8. வாழ்த்து எத்தனை வகைப்படும்?
9. குளகச் செய்யுள் இடம்பெறும் நூல்கள் இரண்டினைக் கூறுக.
10. பொருளால் தொகுக்கப்பட்ட நூல்களுக்கு இரண்டு சான்று தருக.
11. செய்யுள் நெறியின் இரு வகைகள் யாவை?
12. உள்ளதை உள்ளவாறு கூறல் எந்த அணி?
13. முன்னம் – இதன் பொருள் யாது?
14. வஞ்சப் புகழ்ச்சி அணி அமைந்த புறப்பாடலைப் பாடியவர் யார்?
15. விரோத அணி இலக்கணத்தில் யாப்பு எவ்வாறு கூறப்படுகிறது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. காய்ச்சீரின் வேறு பெயரென்ன? அப்பெயர்க்கான காரணம் யாது?
2. கூழை என்பதன் பொருள் யாது?
3. ஏட்டுச்சுவடிகளில் தொடர்ச்சியாக எழுதப்பட்டிருக்கும் பாக்களில் சீர், அடி ஆகியவற்றை பிரித்துப் பார்ப்பது எப்படி?
4. ஒழிபியலில் சொல்லப்படும் மூன்று வகையான இலக்கணக் கருத்துகள் யாவை?
5. காப்பியங்களில் இடம்பெறும் அகப்பொருள் நிகழ்ச்சிகள் யாவை?
6. சமநிலை என்பதற்கு வைதருப்பமும் கௌடமும் கொள்ளும் பொருள் என்ன?
7. தீவக அணியின் பெயர்க் காரணம் கூறுக.
8. சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள காப்பியப் பண்புகளாக இளங்கோவடிகள் கூறுவன யாவை?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) தளை வகைகளை விளக்கி எழுதுக.

   (அல்லது)

   (ஆ) பா வகைகள் குறித்து கட்டுரை வரைக.

2. (அ) ஆசிரியப்பாவின் இனங்கள் குறித்து கட்டுரை எழுதுக.

   (அல்லது)

   (ஆ) காலந்தோறும் அணி இலக்கண வளர்ச்சி குறித்து ஆய்க.

3. (அ) புகழாப் புகழ்ச்சி அணி குறித்து கட்டுரை எழுதுக.

   (அல்லது)

   (ஆ) புணர்நிலை அணியை விளக்கி எழுதுக.

***